இல்லை. அதைச் சுற்றியுள்ள ஓட்டல் உரிமையாளர்கள் ஆழ் குழாய்க் கிணறு போட்டு தண்ணீரை எடுத்து விடுவதால், குளத்தில் தண்ணீர் வற்றிப் போய்விட்டது. ஆகவே, அந்தக் குளத்திற்கும், ஆழ்குழாய்க் கிணறு போட்டு தண்ணீர் நிரப்ப ஏற்பாடு செய்திருக்கிறோம். அதைப்போல, இந்தத் திருக்குளத்திலும் தண்ணீர் நிறைய இருக்கும்படி ஆழ்குழாய்க்கிணறு போட அரசு ஆணையிடும்.

சேலம் மாவட்டம், ஓமலூர், காடையாம்பட்டி ஒன்றியங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.

118—(*வினா எண் 9992) **திரு. கே. அன்பழகன்** : மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஓமலூர், காடையாம்பட்டி ஒன்றியங்களில் 1986–87 ஆம் ஆண்டில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். இந்த இரு ஒன்றியங்களிலும் 7 புதிய சங்கங்கள் ஆரம்பிக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இந்த நிதியாண்டு முடிவுக்குள் துவக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[முற்பகல் 11–00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 118 முடியும் வரை அவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப் படுகிறது.

திரு. கே. அன்பழகன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். காடையாம்பட்டி, ஓமலூர் ஒன்றியங்களிலுள்ள கிராமங்களில் பெரும்பாலானவை மலைப் பாங்கான பகுதிகளாகும். அந்தப் பகுதி மக்கள் பெரும்பாலும் கால்நடை வளர்ப்பதை முக்கியத் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மேலும் பல கிராமங்களுக்கு இந்தச் சங்கங்களை அமைத்துத் தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1987 மார்ச் 11]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியில் ஓமலூர் ஒன்றியத்திலும் காடையாம்பட்டி ஒன்றியத்திலும் சங்கங்கள் உண்டா என்று கேட்டார். ஓமலூர் ஒன்றியத்தில் தேக்கம்பட்டி, தட்டாஞ்சாவடி, வெல்லக்கீழ்பட்டி, வெள்ளாளபட்டி, வட்டக்காடு ஆகிய ஊர்களிலும், காடையம்பட்டி ஒன்றியத்தில் கருவள்ளி மற்றும் பண்ணப்பட்டு கிராமங்களிலும் மொத்தம் 7 இடங்களில் சங்கங்களை துவக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், பல கிராமங்களில் சங்கங்கள் வேண்டும் என்றால் மாண்புமிகு உறுப்பினர் அதற்குத் தகுந்தபடி அங்கு உள்ளவர்களுக்கு எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து திட்டத்தை அனுப்ப வேண்டுமென்று சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. அன்பழகன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பால் உற்பத்தியாளர் சங்கங்களை அதிகரிக்கும் வகையில் சேலம், பால் பண்ணையினுடைய பால் கொள்ளளவுத் திறனை விரிவாக்கக்கூடிய திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அது பால் பெருக்குத் திட்டம்தான். அதனுடைய பக்குவப்படுத்துகிற சக்தியை அதிகப்படுத்துவதற்கு திட்டம் இடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 119 மற்றும் 120 மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

1—

மாலைப்பட்டி—அச்சராசக்காபட்டி சாலையை சீர்செய்தல்.

வினா எண். 2249—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, திண்டுக்கல்-நத்தம் சாலையில் குட்கனாறு இல்லத்திலிருந்து பிரிந்து மாலைப்பட்டி வழியாக அச்சராசக்காபட்டிக்கு சாலையை சீர் செய்ய அரசு முன்வருமா?